REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 8வ செவ்வாய் (19—2—57) ★ ★ வெளியூர்: மாசி 9வ புதன் (20—2—57) [இதழ் 217

ஆண்களைவிட பெண்கள் அதிகம்!

சென்னை, பிப், 18—

தமிழ் நாட்டில் உள்ள மக்கள் சபைத் தொகுதிகளில் மிகப் பெரும்பாலானவற்றில், வாக்காளர்களில் ஆண்களைவிட பெண்களே 5 முதல் 20 சதவிகிதம்வரை அதிகமாக இருக்கின்றனராம்! இராமநாதபுரம் மக்கள்சபைத் தொகுதியில்தான் அதிகமான சதம் பெண் வாக்காளர் இருக்கின்றனராம்!

இங்கு 2,54,440 பெண் வாக்காளரும், 2,14,359 ஆண் வாக்காளரும் உள்ளனராம்;

மொத்தம் உள்ள 34 தொகுதிகளில், 20 தொகுதிகளில் ஆண்களைவிட பெண்களே அதிகமாக உள்ளனராம்!

அபேட்சகர்களுக்கு தேர்தல் கமிஷன் அறிவுரை

காங்கிரசார் செவிமடுப்பரா?

அதிகாரிகள் சட்டத்தை நிலைநாட்டும் கடமையுடையவர்கள்

தண்டனைக்குரிய குற்றங்கள்பற்றி விளக்கம்

ஆள் மாருட்டம் செய்து திருட்டு ஓட்டு போடுதல், ஓட்டர்களுக்கு இலஞ்சம் கொடுத்து ஓட்டுப் பெறுதல், ஓட்டர்களையோ மற்றவர்களையோ அச்சுறுத்துதல், வாக்குப் பதிவு நிலையத்திற்கு 100 கெச தூரத்திற்குள் ஓட்டுச் சேகரித்தல், வாக்குச் சாவடிகளுக்கு வண்டிகள் மூலம் ஓட்டர்களை அழைத்து வருதல், இதர அபேட்சகரது தேர்தல் கூட்டத்தில் குழப்பம் விளைவித்தல் இவை எல்லாம், அபேட்சகர்கள் செய்யக்கூடாதன—இவை தண்டனைக்குரிய குற்றங்கள் என்று, தேர்தல் கமிஷன், புதுடில்லியிலிருந்து தெரிவித்திருக்கிறது.

மேலும் தேர்தல் கமிஷன் கூறுவதாவது:—

'மோட்டார் வண்டிகள் வைத்திருப்போர், தங்கள் குடும்பத்தவரைத் தவிர, இதர வாக்காளர்களை, ஓட்டுச் சாவடிக்கு அழைத்துச் செல்ல வண்டிகளைத் தருவது குற்றமாகும். இந்தக் குற்றம் புரிபவர்கள், போலீசாரால் வாரண்ட் இன்றிக் கைது செய்யப்படலாம்; 250 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

"மாற்றுக்கட்சிக்காரர்கள் கூட்டத்தில் 'கலாட்டா' செய்பவர்கள், இதுபோன்றே அபராதம் விதிக்கப்படலாம்.

இதுபோல இதர குற்றங்களுக்கும் சட்டப்படி தண்டனை உண்டு."

வேண்டுகோள்

அபேட்சகர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல் கமிஷன் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது:—

"தேர்தல்கள் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடைபெற வேண்டுமானால், தேர்தல் விதிகளை எல்லோரும் மதித்து நடக்க வேண்டும் என்பதை, தங்கள் ஆதரவாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் வற்புறுத்திக் கூறுமாறு எல்லா அபேட்சகர்களையும், அரசியல் கட்சிகளையும் தேர்தல் கமிஷன் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறது.

"ஒருவர் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவராயினும், மற்றவர்களும் ஒரு குறிப்பிட்ட தொகுதியில் எந்தவித இடையூறுமின்றி வாக்காளரை அணுகி ஓட்டுத் தருமாறு கேட்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

"ஏதாவது ஒரு அபேட்சகரோ அல்லது அவரது ஆதரவாளரோ இந்த தேர்தல் விதிகளை மீறினால் இதற்குப் பரிகாரம் தேடவேண்டியவர்கள் நிர்வாக அதிகாரிகளேயாவர். அவர்கள், சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய கடமையுடையவர்கள். இதற்குப் பரிகாரம் தேட, போட்டி அபேட்சகரே முனையக் கூடாது; ஏனெனில், அப்படி முனைவது, தேர்தல்கள் சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாக்குப் பதிவு நடைபெறுவதற்குத் தேவையான அமைதியைக் கெடுத்துவிடும்"

தேர்தல் கமிஷனின் இந்த அறிவுரைகள், வேண்டுகோள் எல்லாம் கேட்பதற்கு இனிப்பாகத்தான் இருக்கின்றன; ஆனால், காங்கிரசார் இவற்றிற்கு எத்தனைதூரம் செவிசாய்க்கப்போகின்றனரோ?

சட்டத்தை மீறி, தண்டனைக்குரிய குற்றம் புரிவோரைப் பிடித்துக் கொடுத்தால், சட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய நிர்வாக அதிகாரிகள் எத்தனை தூரம் பாரபட்சமின்றி நடந்து கொள்ளப்போகிறார்களோ? — என்ற ஐயம் கிளம்பும் வகையில்தான் நிலைமைகள் இருக்கின்றன!

எல்லையில் துருப்புகளை குவிப்பதாக பரஸ்பரக் குற்றச்சாட்டுகள்

காஷ்மீர் தகராறு முற்றுகிறது

நியூயார்க், பிப். 18—

இந்தியா, பாகிஸ்தான் எல்லையோரங்களில் துருப்புகளைக் குவிப்பதாக பாகிஸ்தான் பிரதிநிதி ஐ. நா. பாதுகாப்புச் சபையில் குற்றம் சாட்டியிருக்கிறார்.

இதற்கு முன்பாக இந்தியப் பிரதிநிதி கிருஷ்ணமேனன், இதுபோல பாகிஸ்தான் தனது இராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டு வருவதாகவும், இந்திய எல்லையோரத்தில் துருப்புகளைக் குவிப்பதாகவும் குற்றம் சாட்டியிருந்தார்.

இதனை மறுத்துத்தான் பாகிஸ்தான் பிரதிநிதி முதலில் கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார்.

பெரிய அநீதி

ஜோத்பூரில் தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசிய பண்டித நேரு, 'ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இப்போது வந்துள்ள தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்கள் இந்தியாவிற்குப் பெரும் அநீதி இழைத்துள்ளனர்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'அவர்கள் (பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கியூபா) மக்கள் தவறான வழி நடக்க வேண்டுமென விழைகின்றார்கள். இந்தக் கொள்கையின் விளைவு நல்லதாயிருக்க முடியாது,' என்றும் பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

புனித யுத்தம்

நியூயார்க், பிப். 17—

அமெரிக்க டெலிவிஷனில் தோன்றிப் பேசிய கிருஷ்ண மேனன், 'இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே நேரடித் தகராறு வளரும்போல் தெரிகிறது; ஏனெனில், 'புனித் யுத்த'த்தில் ஈடுபடப் போவதாக பாகிஸ்தான் அச்சுறுத்திக் கொண்டுவருகிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'ஆக்கிரமிப்பை முறியடிப்போம்'

ஷகரன்பூர், பிப். 18—

காஷ்மீரின் இன்றைய நிலையில் தலையிடும் எந்த ஒரு அன்னிய சக்தியையும் காஷ்மீர் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்றும், 'காஷ்மீர் ஆக்கிரமிக்கப்படுமானால் அந்த ஆக்கிரமிப்பை முறியடிக்கத் தயங்கமாட்டோம்' என்றும் பக்ஷி குலாம் முகம்மது கூறியிருக்கிறார்.

ரஷ்யாவின் ஆதரவு

இப்போது ஐ. நா. பாதுகாப்பு சபையில் வந்துள்ள தீர்மானம், ஐ. நா. சாசனத்திற்கு முற்றிலும் விரோதமானதாகும் என்றும், காஷ்மீர் விவகாரம் ஏற்கனவே அந்த மாநில மக்களால் முடிவு செய்யப்பட்டுவிட்டது என்றும் ரஷ்யப் பிரதிநிதி, இந்தியாவிற்கு ஆதரவு தெரிவித்துப் பேசியிருக்கிறார்.

போதுச் சபைக்கு போகுமா?

ஐ. நா. பாதுகாப்பு சபை முன்புள்ள நான்கு நாடுகளின் தீர்மானத்தை, ரஷ்யா, ரத்து உரிமையைக் கொண்டு நிராகரித்துவிட்டால், காஷ்மீர் பிரச்சினையை ஐ. நா. பொதுச் சபைக்கு பாகிஸ்தான் எடுத்துச்செல்ல தீவிரமாக முனைந்துள்ளதாம்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானவர்: நஷ்ட ஈடு தர முடிவு

இங்கல்ல - பஞ்சாபில்!

சாந்திகார், பிப். 18—

கடந்த ஆண்டு மே 29-ந் தேதியன்று, கால்சா இரயில் நிலையத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்துபட்டோரின் குடும்பத்திற்கு தலா 3,000 ரூபாயும், காயம்பட்டு முடமானோருக்கு 1,500 ரூபாயும், சிறு காயம்பட்டோருக்கு 500 ரூபாயும் நஷ்டஈடு வழங்குவதென பஞ்சாப் சர்க்கார் முடிவுசெய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் 5 பேர் பலியாயினர்.

எதிர்க்கட்சியினரை சிறைபடுத்தி தேர்தலா?

மதுராந்தகம், பிப். 18—

சென்னை சட்டசபைக்கு மதுராந்தகம் தொகுதியில் சோஷலிஸ்டுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் துரைபாபு என்பாரை போலீசார் கைது செய்திருக்கின்றனராம்.

அரசாங்க ஊழியர்கள் அரசியலில் பங்கு கொள்ளவோ, அபேட்சகர்களுக்கு ஆதரவு தேடவோ கூடாது என்று ஒழுங்குச் சட்டம் இருந்தும் கூட, அப்பகுதியிலுள்ள சில அரசாங்க ஊழியர்கள் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு ஆதரவாக ஓட்டுச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதை கண்டித்துக் கூற தாலுகா அலுவலகத்திற்கு 500 தொண்டர்களுடன் அவர் சென்றபோதுதான் போலீசார் அவரைக் கைது செய்திருக்கின்றனர்.

எகிப்திலிருந்து, தனது துருப்புகளைவாபஸ் பெறுமாறு இஸ்ரேலுக்கு அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் மீண்டும் புத்திமதி கூறியிருக்கிறாராம்!

விடுதலைக் கிளர்ச்சிகளை ஒடுக்க புதியதோர் திட்டம்

டாக்டர் சுகர்ணோ தயாரித்திருக்கிறாராம்

ஜகார்தா, பிப். 16—

இந்தோனேஷியாவில் நடைபெற்றுவரும் விடுதலைக் கிளர்ச்சிகளை ஒடுக்கி அங்குள்ள அரசியல் பிரச்சினைகளைத் தவிர்க்கப் புதியதோர் பரிகாரம் கண்டு பிடித்திருக்கிறாராம், இந்தோனேஷியத் தலைவர் டாக்டர் சுகர்ணோ.

அவர் தம்முடைய இந்த புதிய பரிகாரத்தை, வருகிற 21-ந்தேதி வெளியிடப்போவதாகவும் அறிவித்திருக்கிறாராம்!

தம்முடைய இந்தப் புதிய திட்டப்படி இனிமேல் உருவாக்கப்பட இருக்கின்ற சர்க்கார், அமைப்பில் மட்டுமல்லாமல் நடைமுறைகளிலும்கூட ஒரு புதுவிதமாக அமைந்திருக்கப்போவதாக அறிவித்துள்ளார் என்று, இந்தோனேஷியக் கிறித்துவ எதிர்ப்புக் கட்சித் தலைவர் ஜோன்ஸ் லிமாஜு என்பார் தகவல் தந்திருக்கிறார்!

இந்தத் தகவலை அவர் தெரிவிப்பதற்குமுன், இந்தோனேஷியாவிலுள்ள 5 மாநில சர்க்கார்களையும் சேர்ந்த 10 பிரதிநிதிகள், டாக்டர் சுகர்ணோவைச் சந்தித்து மந்திரி சபையை கலைத்து மறுபடியும் புதுப்பிப்பது பற்றி விவாதித்திருக்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தலில் போட்டியிடும் 149 வயதுக் கிழவர்!

லண்டன், பிப், 18—

அஜர்பைஜானில், (ரஷ்யா) அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் ஸ்தலத் தேர்தலில் போட்டியிட 149 வயதான முகம்மது இபாதாவ் என்ற முதுபெரும் கிழவர் அபேட்சகராக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார்!

இந்தத் தகவலை மாஸ்கோ வானொலி தந்திருக்கிறதாம்.

திருப்பித்தாக்க சட்டம் அனுமதிக்கிறதாம்.

ஆந்திர நீதிபதியின் தீர்ப்பு

"தன்னைத் தாக்க வருபவரைத் திருப்பித் தாக்குவதை சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் தம்மைத் தாக்கியதனால் ஏற்பட்ட காயத்தைவிட, தற்காப்பு முயற்சியின் விளைவாக தாக்கியவருக்கு ஏற்பட்ட காயத்தின் அளவு அதிகரித்துவிடக்கூடாது" என்று, ஆந்திர பிரதேச உயர்நீதிமன்ற நீதிபதி, ஒரு அப்பீல் வழக்கில் தீர்ப்புக் கூறும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

பார்மோசா வர!

சௌ-என்-லாய்க்கு அழைப்பு?

தைப்பே, பிப். 16—

"கடந்த காலத்திற்காக வருந்தி, இங்கே புத்தம் புதிய வாழ்க்கை துவக்க விரும்பினால், சௌ-என்-லாய், பார்மோசாவிற்கு வரலாம்"

என்று, 'தேசிய சீன'ப் பிரதமர் ஒ-கே-யூ அழைப்பு விடுத்திருக்கிறாராம்!

'அழைத்தால் பார்மோசா செல்வேன்,' என்று சீனப்பிரதமர் சௌ-என்-லாய் அண்மையில் தெரிவித்திருந்ததைக் குறிப்பிட்டு பத்திரிகையாளர் கேட்டபோது, மேலும் அந்த 'தேசியச் சீன'ப் பிரதமர், 'சீனாவைத் திரும்பப் பெறுவதே தேசியச் சீன சர்க்காரின் பிரதான நோக்கம்,' என்றும், 'வெகு சீக்கிரத்திலேயே பார்மோசாவிலிருந்து, படைகள், செஞ்சீனாமீது பாயும்' என்றும் கூறினாராம்!

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 19—2—57 செவ்வாய்

வெற்றி தெரிகிறது!

தேர்தல் நாள் வேகமாக விரைந்துகொண்டு இருக்கிறது. தமிழ் மக்களில் அரசியல் விழிப்புணர்ச்சி படைத்தோர் அனைவரும், அந்நாளை ஆர்வத்துடன் எதிர் நோக்கி இருக்கின்றனர்.

தேர்தல் பணி மெள்ள மெள்ளச் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது. அதிவிரைவிலே அது பெருந் தீயாகப் பற்றி எரியக்கூடும்.

இந்தத் தேர்தல், சென்ற பொதுத் தேர்தல்போல் அல்லாது எல்லா வகையிலும் புதுமையானதாக இருக்கிறது. நமது கழகம் நேரடியாகத் தேர்தலில் கலந்துகொண்டிருப்பது ஒரு புதுமை என்றால், அதனிலும் புதுமையானது, காங்கிரசுக் கட்சி உட்பட தேர்தலில் பங்கு கொண்டுள்ள கட்சிகள் அனைத்தும், தம் தம் தாக்குதலை நமது கழகத்தின்மீது திருப்பிவிட்டிருப்பது.

நமது கழகத்தைக் காங்கிரசுக் கட்சித் தலைவர்களெனப் படுவோர் முதல் தொண்டர் எனப்படுகின்றவர் வரையில் தூற்றுவதைவிட, பன்மடங்கு கூடுதலாக மற்ற அரசியல் கருத்தினர் ஏசவும் செய்கின்றனர்—கழகம் நெஞ்சினாலும் தீண்டாத பெரும் குற்றங்கள் அனைத்தையும் செய்திருப்பதாகப் பழித்தும் பேசுகின்றனர்.

அவர்கள் போக்கு கண்டு மக்கள் திகைக்கின்றனர்—நமக்கும் அது புரிந்துகொள்ள முடியாத அரசியல் புதிராக இருக்கிறது.

தேர்தலில் காங்கிரசுக் கட்சியைத் தோற்கடிப்பதைக் காட்டிலும் முதற்கண் நமது கழகத்தைத் தோற்கடிப்பதுதான் முக்கியமானது என்ற அடிப்படையில் செயல்பட்டு வருகின்றவர்கள்போன்றே மாற்றுக் கருத்தினர் செயல்பட்டு வருகின்றனர். இந்த ஒரே ஒரு உண்மையைத்தான், நமது கழகத்தை நோக்கி அவர்கள் ஒரு மனதாகத் தொடுத்துவரும் தூற்றல் பாணம் நமக்கு உணர்த்துவதாக இருக்கிறது.

அவர்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து, எத்தகு விளைவை எதிர்பார்த்துத் தாக்குதல் நடத்திவருகிறார்களோ, அத்தகு விளைவை உருவாக்கக்கூடிய வகையில் நமது கழகத்தவர்கள் நடந்துகொள்வதாகக் காணோம். அவர்கள் கூட்டுத் தாக்குதலைத் தெரிந்தோ தெரியாமலோ, நமது கழகத் தோழர்கள் துச்சமென மதித்து நடந்துகொண்டு வருகின்றனர். அவர்களுடைய கூட்டு எதிர்ப்புக்கு எள்ளளவு மதிப்பேனும் தருகின்றவர்களாக நமது கழகத் தோழர்கள் காணப்படவில்லை. அவர்கள் எதிர்ப்பிற்கும் ஏசலுக்கும் நமது கழகத்தவர் காட்டிவரும் அலட்சியம், அவர்களுக்கு மேலும் மேலும் ஏமாற்றத்தையும் எரிச்சலையும் தந்து வருகிறது.

காங்கிரசு நீங்கலாக மற்றக் கட்சியினர், வெளிப்படையாக நம்மைத் தூற்றி வருகின்ற அதே வேளையில், சிற்சில இடங்களில் தங்களுக்கும் நமக்கும் பகை இல்லை—பிணக்கில்லை என்று பசப்பியும் வருகின்றனர். அதுவுமன்றி கழகத்தின் ஆதரவு தங்களுக்குத்தான் தரப்பட்டு இருக்கின்றது என்றும் மாரீச்சம் செய்தும் வருகின்றனர்.

இப்போக்கு, அவர்களுடைய வெளிப்படைத் தாக்குதலைவிட நேர்மையற்றதாகும் — நாணயமற்றதாகும். இத்தகைய பொய்யுரைக்கு நமது கழகத்தவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் இரையாகிவிட மாட்டார்கள் என்பதை அவர்கள் இதுவரை உணர்ந்துகொள்ளவில்லையானாலும், இனியாவது உணர்ந்துகொள்ள வேண்டும்.

நாம் தேர்தலில் போட்டியிடுவது, நாடாண்டுவரும் காங்கிரசுக் கட்சியை எதிர்த்தேயல்லாது, இந்தக் கட்சிகளை எதிர்த்து அல்ல. வலிவுள்ள எதிர்க் கட்சியை அமைக்கும் நல்நோக்குடன் நாம் தேர்தலில் கலந்துகொண்டு இருப்பது, சனநாயகக் கடமையை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கேயல்லாது, இக்கட்சிகளுக்கு ஏதாவது அரசியல் அந்தஸ்து இருக்குமானால், அதைத் தட்டிப்பறித்துக்கொள்வதற்காக அல்ல. எனவே, இக்கட்சிகள் இதுவரை மேற்கொண்டுவந்த தவறான போக்கை மாற்றிக்கொண்டு, சென்ற பத்தாண்டுக் காலமாகக் காங்கிரசு விதைத்துள்ள சீரழிவை இனியாவது மக்களுக்கு விளக்கிக் காட்டும் பணியில் ஈடுபட முன்வரட்டும்.

தேர்தலில் நமது கழக ஊழியர்கள் என்றுமில்லாத அளவில் ஊக்கம் காட்டிவருகின்றனர். தாங்கள் ஒவ்வொருவருமே தேர்தலில் போட்டியிடுவதாகவே எண்ணி ஆர்வத்துடன் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகமெங்குமுள்ள பட்டிதொட்டிகள் அனைத்திலும், நமது கழகத்தின் வண்ணக் கொடி பட்டொளி வீசிக் கம்பீரமாக விண்ணில் பறந்துகொண்டிருக்கிறது. நமது தேர்தல் பிரச்சாரச் சுவரொட்டிகளில் பொறித்துள்ள பொன்மொழிகளை, கூட்டம் கூட்டமாக நின்று பொதுமக்கள் படித்து மனப்பாடம் செய்துகொள்ளுகின்றனர்.

நமது கழக அபேட்சகர்கள், செல்லுமிடமெங்கும் மக்களால் முக மலர்ச்சியுடன் வரவேற்கப்படுகின்றனர். நெருங்கிய சுற்றத்தாருடன் பேசிப் பழகுவதுபோன்று நமது அபேட்சகர்களிடம் மக்கள் பரிவுகாட்டிப் பேசிவருகின்றனர்.

இவ்வாறு நமது கழக ஊழியர்களிடமும் அபேட்சகர்களிடமும் அகமும் முகமும் மலர நடந்துகொண்டுவரும் மக்கள், நமது கழகத்தின் சார்பில் நல்ல தீர்ப்பு அளிக்காமலா இருப்பர்! காங்கிரசுக் கட்சியின் பத்தாண்டுக்காலக் கொடுங்கோலாட்சிக்கு முடிவு கட்டத் தவறியா விடுவர்!

ஒருக்காலும் இல்லை. நமது ஊழியர்களிடமும் அபேட்சகர்களிடமும் பொதுமக்கள் காட்டிவரும் பரிவில் நமது வெற்றி தெளிவாகத் தெரிகிறது. அப்பரிவில் அடங்கியிருக்கும் உண்மையைத் தாங்கள் விளக்கமாகத் தெரிந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், காங்கிரசை எதிர்க்கப்போவதாகத் தேர்தல் களம் புகுந்த மற்றக் கட்சியினர், நம்மை எதிர்ப்பதையே முக்கியமெனக் கருதத் தொடங்கிவிட்டனர் போலும்!

'பாரத மாதா'வைக் கேட்டு தீர்மானித்துக் கொள்ளுங்கள்!

—: அண்ணா :—

"காங்கிரஸ்காரர்கள் சொல்லுகின்றார்கள்—சிலர் நம்புகின்றார்கள்—'காங்கிரஸ் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் நாட்டை ஆளுவதற்குச் சக்தி இல்லை—வசதி இல்லை—ஆற்றலில்லை' என்று!—இதைத்தான், இப்படித்தான் சர்ச்சிலும் சொன்னான்! சர்ச்சில் எப்படி ஆணவமாகச் சொன்னானோ 'இந்த நாட்டுமக்களுக்கு ஏதும் இல்லை' என்று—அதே முறையில்தான் இன்றைய தினம் டில்லியிலே உள்ள பாதுஷாக்கள் பேசுகின்றார்கள்!

"ஒன்றை மட்டும், கல்மேல் எழுதுவதுபோல் உங்கள் நெஞ்சத்திலே பதித்துக்கொள்ளுங்கள்—சர்ச்சில், எப்படி ஆணவத்தோடு பேசியவன் இந்தியாவுக்கு விடுதலையைத் தந்தானோ, அதே முறையில், இன்று ஆணவத்தோடு பேசுகின்ற டில்லி, தன்னுடைய ஆணவத்தைக் குறைத்துக்கொண்டு தமிழர்களிடத்தில் தனியாட்சியைத் தந்தே தீரும். அதைப் பெறாமல் நாங்கள் ஓயப்போவதில்லை.

"திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 'ஓட்டு' போடுவதா இல்லையா—அழுத்தமான காங்கிரஸ்காரர்கள் 'பாரத மாதா'வைக் கேட்டுத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்; அவர்களை நான் வற்புறுத்தவில்லை.

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் அந்தஸ்து, மார்ச்சு மாதத்தில் என்ன நடக்கிறதோ அதைப் பொறுத்து இல்லை. தெளிவாக அதைப் பொறுத்து இல்லை—திட்டவட்டமாக அதைப் பொறுத்து இல்லை. ஆகவே 'திராவிட முன்னேற்றக் கழகத்துக்கா அந்தஸ்து கொடுப்பது' என்று கருதுகின்ற காங்கிரஸ்காரர்கள், ஓட்டுப்போடாமல்போய்விடட்டும்; அதைப்பற்றி நாம் கொஞ்சமும் கவலைப்படவில்லை.

"ஆனால், மார்ச் மாதத்தில் நீங்கள் எடுக்கின்ற முடிவு, 'தி. மு. கழகத்துக்கு அந்தஸ்தா இல்லையா,' என்பதல்ல; 'தமிழகத்திற்கு அந்தஸ்தா இல்லையா,' என்பதைத் தீர்மானிக்கும்!

"காங்கிரசுக்குத்தான் 'ஓட்டு' அளிப்போம் என்று தீர்மானிப்பீர்களானால், தமிழர்களுக்குப் புது வாழ்வு இல்லை; தமிழர்களுக்குப் புது அந்தஸ்து இல்லை; தமிழர்களுக்குப் புதுச் செல்வம் இல்லை; தமிழர்களுக்குப் புதுச் செல்வாக்கு இல்லை. இதை நீங்கள் நெஞ்சார நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

"ஏன் நான் இதை அவ்வளவு வலியுறுத்திச் சொல்லுகின்றேன் என்றால், காஞ்சிபுரத்திலே தி. மு. க. எந்த அளவுக்குச் செல்வாக்குப் படைத்ததோ, அதே அளவுக்குச் செல்வாக்கு தூத்துக்குடியிலே உண்டு; தூத்துக்குடியிலே எந்த அளவுக்குச் செல்வாக்கு உண்டோ, அதே அளவு மதுரையிலே உண்டு; மதுரையிலே எந்த அளவு செல்வாக்கு உண்டோ அதே அளவு சேலத்திலே உண்டு; சேலத்திலே எந்த அளவு செல்வாக்கு உண்டோ, அதே அளவு சென்னிமலையிலே உண்டு. சந்தேகம் இருக்கிற உள்ளூர் காங்கிரஸ்காரர்கள், தி. மு. கழகத்தின் செலவிலேயே பிரயாணம் செய்து தமிழ் நாட்டை ஒருமுறை சுற்றிப் பார்க்கட்டும்.

"காங்கிரஸ்காரர்கள் ஏதோ கருதிக்கொண்டிருக்கிறார்கள்—'தி. மு. கழகத்திற்கு ஒன்றும் இல்லை' என்று! அவ்வளவு சுலபமாகக் கழகம் இல்லை; ஆகையினாலே காங்கிரசிலே அழுத்தமான பற்றுக்கொண்டவர்கள் எப்படியோ தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

"ஆனால் மார்ச்சு மாதம் நீங்கள் எடுக்கின்ற முடிவைப் பொறுத்துத்தான் தமிழ் நாட்டினுடைய எதிர்காலம் இருக்கிறது; அதை நீங்கள் மறந்துவிட வேண்டாம்."

எதிர்க் கட்சி இல்லாத நாடு ஜனநாயக நாடாகாது

'உதயசூரியன்' எழுச்சி—காங்கிரஸ் 'பாசிச வெறி'யின் வீழ்ச்சி

சென்னைக் கூட்டத்தில் க. அன்பழகன் கருத்துரை

"நாங்கள் இந்தத் தேர்தலில் எங்கள் சின்னமாக உதயசூரியனைக் கேட்டோம். ஆனால் பெருவாரியான அளவில் அபேட்சகர்களை நிறுத்தி உறுதியானதோர் எதிர்க்கட்சியாக அமைய நிற்கும் தி. மு. கழகத்திற்கு அந்தச் சின்னத்தை முழுவதுமாகக் கொடுக்க இந்த சர்க்காருக்கு உணர்வில்லை. நாங்கள் உதயசூரியன் சின்னத்தைக் கேட்டதில் அடிப்படைப் பொருள் உண்டு. காங்கிரஸ் என்ற இருள்சூழ்ந்து கிடக்கும் இந்த நாட்டில், இருளகற்றி ஒளிபெறச் செய்யும் உதயசூரியனாகத் தி. மு. கழகம் எழுகிறது என்பதுதான் பொருள். நாட்டில் நிலவும் வறுமை எனும் பனியைப் போக்க உதயசூரியன் எழுகிறான் என்பது பொருள்.

"திராவிட முன்னேற்றக் கழகம் என்ற உதயசூரியன் எழ ஆரம்பித்ததும், இருள் என்ற காங்கிரஸ் எதேச்சாதிகாரமும், பனி போன்ற காங்கிரசின் பாசிசவெறியும், குளிர்போன்ற மக்கள் வறுமை நிலையும் நிச்சயம் அகன்றே போகும்.

"அத்தகைய ஒரு எதிர்க்கட்சி நாட்டில் இன்று உருவாகிவிட்டதே என்று நினைத்ததும் காங்கிரசார் ஆத்திரம் கொண்டு, அதை அடக்கமுடியாமல் துள்ளுகிறார்கள். உருவாகிவரும் எதிர்க்கட்சியைக் குலைக்கக் கங்காணிகளை நிறுத்துகிறார்கள். இந்த நேரத்தில் மக்கள் செய்யவேண்டிய மாபெரும் கடமை எல்லாம், நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டியதுதான்.

"உதயசூரியன் எழுந்தானதும், கொட்டிலில் அடைக்கப்பட்டிருக்கும் மாடுகளின் கழுத்தில் நுகத்தடி மாட்டி மூக்கணாங்கயிறு போட்டு, ஏர்களில் பூட்டப்பட்டு, நிலத்தை உழுது, பயிர் செய்து, தானியத்தை அறுத்தெடுத்தேயாக வேண்டும். அது போலவே நாட்டிலேயும் நல்லதோர் எதிர்க்கட்சி அமைந்தால் நிச்சயம் நாட்டில் நல்வாழ்வு ஏற்பட்டே ஆகவேண்டும்."

இவ்வாறு, 17—2—57 அன்று சென்னை—மெமோரியல் ஹால் தெருவில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர் க. அன்பழகன் அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது :-

"இன்றைய காங்கிரஸ்காரர்களும் பெரியாரும்கூட, 'சனநாயகம் இல்லையென்றால் என்ன—காங்கிரஸ்தான் இருக்கிறதே' என்று கூறுகிறார்கள். அவர்கள் இப்படிக் கூறுவதற்குக் காரணம், எது எத்தகைய பொருள் உடையது என்று அவர்கள் தெரிந்து கொள்ளாததுதான்.

"'காங்கிரஸ்' என்று சொன்னாலே போதும்; அதுவே 'சனநாயகம்' என்று காமராசர் நினைக்கிறார். 'காங்கிரஸ்' என்றால் 'சுயராஜ்யம்' என்று அவர் சொன்னால்கூடக் கொஞ்சம் பொருந்தும்! ஏனென்றால், நாட்டுக்கு அவர்கள் சுதந்திரம் தராவிட்டாலும், தங்கள் 'காங்கிரஸ்' என்ற கட்சிக்காவது சுதந்திரம் பெற்றுவிட்டார்கள். அவர்கள் விரும்புகிறபடி ஆளுகிறார்கள்; நினைத்ததைச் சட்டமாக்குகிறார்கள்; எனவே அவர்களுக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது. ஆனால் மக்கள் நினைக்கிறபடி அவர்கள் நடக்காததால் அது, நாட்டுக்குச் சுதந்திரம் ஆகிவிட முடியாது.

"நாட்டுக்கு சுயராஜ்யம் கிடைத்திருக்கிறது என்றால், அந்த நாட்டை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆளவேண்டும்; அவர்களுடைய விருப்பப்படி நடக்க வேண்டும். அதுதான் சுதந்திர நாடு. அந்தச் சுதந்திர நாடு நல்வாழ்வு பெற நல்லதோர் எதிர்க்கட்சியும் வேண்டும்.

"ஆளும் கட்சியிலிருப்போர், 'எங்களால் எதிர்க்கட்சியை உண்டாக்க முடியுமா?' என்று கேட்கிறார்கள் என்றால், அவர்கள் சனநாயகத்தைக் கெடுக்கிறார்கள் என்பது பொருள். எதிர்க்கட்சி ஒரு சனநாயக நாட்டில் இல்லை என்றிருக்கிற ஒரு நிலை இருக்கும் வரை, ஆளும் கட்சி சனநாயகத் தன்மையுடன் ஆளாது; சந்தர்ப்ப வசதிகளுடன்தான் ஆளும்.

"நாங்களெல்லாம் எதிர்க்கட்சியினரென்றால், எங்காவது வெளிநாடுகளிலிருந்து வந்து இங்கு குடியேறினவர்களா? அல்லது வடநாட்டுக் கூலிகளா?

(3-ம் பக்கம் பார்க்க)

உரிமை முழக்கம் வலுக்கிறது

நிறவெறியை எதிர்த்து அறப்போர்; 8,000 பேர் கைது

ஜோகனஸ்பர்க், பிப். 16—

கடந்த 6 வாரங்களாக தென் னுப்பிரிக்கர் மேற்கொண்டுள்ள சர்க்கார் பஸ் போக்குவரத்துச் சட்ட மறுப்பு இயக்க நடவடிக்கை களின் விளைவாக இன்றுவரை மொத்தம் 8,000 ஆப்பிரிக்கர்கள் ஜோகனஸ்பர்க், பிரிட்டோரியா ஆகிய இடங்களில் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றன ராம்.

இங்குள்ள ஒரு ஆப்பிரிக்கர் விடுதியை ஆயுதந் தாங்கிய போலீசார் சோதனையிட்டு 2,750 பேர்களை கைது செய்த தாகவும், மற்றும் பல பஸ் ரூட் களில் 2,680 ஆப்பிரிக்கர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிகிறது.

ஜோகனஸ்பர்க் - அலெக்சாண் டிரியா நகர்ப்புற எல்லையில், ஒரே நாளில் 462 ஆப்பிரிக்கர்களை போலீசார் கைது செய்திருக் கின்றனராம்.

இந்த நடவடிக்கைகள் குறித்து தெ. ஆப்பிரிக்கப் போலீஸ் உதவி கமிஷனர் குறிப்பிடுகையில், 'சட்ட விரோத நடவடிக்கை களில் ஈடுபடுவோரையும், தேடப் பட்டு வருகிற குற்றவாளிகளையும் தண்டுபிடிக்கவும், இதுபோன்ற மற்றக் குற்றங்களைக் கண்டுபிடிக்க வுமே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது' என்று குறிப்பிட்டாராம்.

'சர்க்காரின் இத்தகைய விப ரீதப் போக்குகள், மக்கள் மன தில் புதியதோர் சந்தேகத்தை யும் குழப்பத்தையும் உருவாக்கி யிருக்கிறது' என்று ஆப்பிரிக்க தேசீயக் காங்கிரசின் தலைவர் எச்சரிக்கைக் குறிப்பொன்று விடுத்திருக்கிறாராம்.

மாவ்மாவ் தலைவருக்கு தூக்கு!

நைரோபி, பிப். 18—

சட்ட விரோதமாக ஒரு கை துப்பாக்கி வைத்திருந்தார் என்று குற்றம்சாட்டி, தேதன் கிமாதி என்ற மாவ்மாவ் இயக்கத் தலை வரை, நேற்று சர்க்கார் தூக்கி விட்டுக் கொன்றிருக்கிறது.

கடந்த நவம்பரில் தரப்பட்ட தண்டனை இப்போது நிறை வேற்றப்பட்டதாம். இவர் செய்துகொண்ட அப்பீல், கிழக்கு ஆப்பிரிக்க நீதிமன்றத்தால் ஏற் கப்படவில்லை; பிரிவி கவுன்சி லுக்கு அப்பீல் செய்யவும் அனு மதிக்கப்படவில்லையாம்!

அல்ஜீரியாவின் விடுதலை வரலாறு

செங்குருதிகொண்டு எழுதப்படுகிறது

தினம் தினம், ஒவ்வொரு இருபத்திநான்கு மணி நேரத்திற் கும், பிரெஞ்சு ஏகாதிபத்திய இராணுவம், விடுதலை கோரி எழுந்துள்ள அல்ஜீரியர்களை, நூற்றுக் கணக்கில் கொன்று குவித்துவரும் கோரம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

கடந்த சனிக்கிழமையன்று மட்டும் 150 அல்ஜீரியர்கள் படு கொலை செய்யப்பட்டதாக பிரெஞ்சு அதிகார வட்டங்களே செய்தி தந்துள்ளன.

332 பேர் கைது

கடந்த 2 மாதங்களில் மட்டும் 332 அல்ஜீரியர்கள் கைது செய் யப்பட்டனர் என்றும், இவர்க ளில் 176 பேர் விடுதலை இயக்கத் திற்கு நிதி திரட்டிக்கொண்டி ருந்தனர் என்றும் கூறப்படுகிறது. இந்தப் படுகோரமான அடக்கு முறை வெறியில் ஈடுபட்டிருக் கும் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அல்ஜீரியாவின் விடுதலை வர லாற்றினை செங்குருதியால் எழுதிக்கொண்டிருக்கிறது!

★★

நமது தாயகம்—திராவிடம்

விடுதலை தவறிக் கெட்டு தாழ்வுற்று வறுமை மிஞ்சி பாழ்பட்டுக் கிடக்கிறது

★

வடநாடு தென்னாட்டின்மீது

ஆதிக்கம் செலுத்துகிறது—ஆதாயம் பெறுகிறது!

தென்னாடு வடவரின் வேட்டைக்காடாகி நிற்கிறது

இந்த அடிமை நிலை

வையகம் வியக்க வாழ்ந்த தமிழர் அனுமதிக்கக்கூடியதா?

★

கேட்கிறது

தி. மு. க.

★

இப்படிக் கேட்பது

குறுகிய புத்தி! குதர்க்க வாதம்!

தேசத் துரோகம்! பாசிச வெறி!

என ஏசுகின்றனர் 'ஏக இந்தியா'க்கள்!

ஆனால்....!

"சின்ன விஷயங்களுக்கும்கூட டில்லி மந்திரி கள் 'சம்மன்' செய்யப்படுகிறார்கள். இது கௌரவமானதாக எனக்குப்படவில்லை— சென்னை மந்திரிகள் உரிய அந்தஸ்துடன் நடத்தப்படுகிறார்கள் என்று எண்ணக்கூடிய தாயில்லை."

—டாக்டர் ஏ. இலட்சுமணசாமி: 3—3—56-ல், சென்னை மேல்(சட்ட)சபையில்.

"இந்தியப் பேரரசிடம் மிதமிஞ்சிய அதிகாரங் கள் குவிந்துகிடக்கின்றன.

"......தங்களுடைய பணத் தேவைக்காக, மாகாண சர்க்கார்கள் இந்தியப் பேரரசிடமே தொங்கிக்கிடக்க வேண்டியுள்ளது. இது, கடன்காரன் ஒருவன் கடன் கொடுப்பவரின் தலைவாயிற்படியில் துவண்டு காத்துக்கிடப் பதுபோல் இருக்கிறது.

"......எனவே, இந்தியப் பேரரசிடம் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்."

—31—3—56-ல், மைசூர் சட்டசபையில் முதன் மந்திரி அனுமந்தையா.

"நாளுக்கு நாள் மத்திய சர்க்காரின் அதிகாரம் குவிந்துகொண்டே போகிறது.

"......பணக்குவியலைவிட அதிகாரக் குவியல் இன்னும் ஆபத்தானது.

"பெரும்பாலான விவகாரங்களில், ராஜ்ய சர்க் கார் டில்லிக்கு ஒரு தபால் பெட்டியாகக் காட்சியளிக்கிறது.

"சுருக்கமாகச் சொல்லப்போனால், ராஜ்ய சர்க்காரின்கீழ் முனிசிபாலிடி எப்படி இருந்து வருகிறதோ அதே போன்றுதான், மத்திய சர்க்காரின்கீழ் ராஜ்ய சர்க்காரும் இருந்து வருகிறது."

—'நவ இந்தியா' 28—5—56-ல் ஆசிரியர் பி. ஆர். இராமகிருஷ்ணன் (காங்கிரஸ்).

"மானியம் வாங்குபவர்களாக டில்லி சர்க்கார் இருப்பதால், அவர்கள் மாநில சர்க்காரின் விவகாரங்களில் அளவுக்கு மீறித் தலையிடு கிறார்கள்.

"......நமக்குள்ள சிக்கலான பிரச்சினைகளுக் குப் பரிகாரம் தேடுவதற்காக நாம், உச்ச மான அதிகாரபீடத்தில் அமர்ந்திருப்பவர் களோடு மோதிக்கொள்ளும் காலம் வரத் தான் போகிறது."

—முன்னாள் முதன் மந்திரி; கவர்னர் குமாரசாமி இராஜா: கோவையில் 29—8—56.

"மத்திய சர்க்கார் சபைகளில் தென்னாட்டு மக்களுடைய வலுவை உணர்த்த அவர்கள் தங்களிடையேயுள்ள மொழி வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டாக வேண்டும். இந்த ஒற்றுமை ஏற்பட்டாலன்றி தென்னாடு, வட நாட்டிற்கெதிராகத் தன்னைக் காப்பாற்றிக் கொள்வது முடியாமற்போய்விடும்."

—ஆந்திர மந்திரி பி. கோபால் ரெட்டியார் 31—1—57.

இவர்கள் எல்லாம் இப்படிக் கூறியிருப்பது ஏன்!

வடநாடு தென்னாட்டின்மீது ஆதிக்கம் செலுத்துகிறது

என்பதைத் தெளிவாக்கவில்லையா?

வாக்காளர்களே! கூறுங்கள்!

★

தன் தாயகம் எது? தேசம் எது?—என்பதை அறிந்தும் அறியாதவராய்

போலித் தேசீயம் பேசும் ஏகாதிபத்தியதாசர்களான

'ஏக இந்தியாக்'களுக்கா உங்கள் 'ஓட்டு?'

நாட்டை மீட்க—விடுதலை பெறப் போராடும்

தி. மு. க. அபேட்சகர்களுக்கே

உங்கள் 'ஓட்டு' தாருங்கள்

★★

எதிர்க்கட்சி...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

இங்கேயே பிறந்து, வளர்ந்து வாழ்நாளெல்லாம் நாட்டின் நீதிக் காகப் பாடுபட்டவர்கள் நாங்கள். காங்கிரஸ் எந்த அளவு முதிர்ச்சி அடைந்தது என்று கருதுகிறார் களோ, அதைவிட அதிக காலத் திற்கு முன்னரே தோன்றி மக்க ளுக்காகப் பாடுபட்ட இயக்கமல்லவா எங்கள் இயக்கம்? இன் றைக்கு இருக்கிற காங்கிரசாரைப் பற்றிக் குற்றங்குறை கூற இடம் உண்டு; ஆனால் எங்கள் நீதிக் கட்சி பரம்பரையினரில் ஒருவரைப் பற்றியாவது யாரேனும் குற்றம் குறை காண முடியுமா?

"அடுத்தாற்போல் எங்களை யெல்லாம் சிறுவர்கள் என்று கூறுகிறார்கள். அப்படியானால் அரசியலில் கிழவர்கள்தான் ஈடு பட வேண்டுமா? கிழவர்கள்தான் அரசியலுக்கு இலாயக்கு என்றால், ஆச்சாரியார் இருந்த இடத்தில் காமராசர் வருவானேன்? ஓ. பி. இராமசாமி இருந்த இடத்தில் சுப்பிரமணியம் வருவானேன்? எனவே, அரசியலில் தகுதியும் பொருத்தமும் உடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தேர்ந்தெடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"இவர்களிடம் திட்டம் என்ன இருக்கிறது?' என்று, நம்மிடம் மாற்றார் கேட்பதற்குப் பதிலாக, 'இவர்களுடைய கொள்கை என்ன' என்று கேட்கட்டும்—கூற லாம்; கூறியிருக்கிறோம் எங்கள் திட்டத்தை!

"இந்த நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயரில்லை; எனவே உடனே இதற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர்வைப்போம்; இந்த நாட்டின் மொழி—தமிழ் மொழி ஆட்சிமொழியாக வேண்டும். அதற்குச் சட்டமியற்றிவிட்டால் மட்டும் போதாது; அதை நடை முறையிலும் செய்யவேண்டும்; செய்தார்களா? இன்னும் கார்டு களில் இந்தியில்தானே அச்சிடு கிறார்கள்? எங்கே வந்தது, தமிழ், ஆட்சி மொழியாக? இந்தி இந்த நாட்டுக்குக் கூடாது என்கிறோம் நாம். உண்மையிலே, இந்திதான் இந்த நாட்டின் பொதுமொழி என்று காங்கிரசார் மன்தார ஒப்புக்கொள்வார்களானால், மக்க ளிடம் ஓட்டுக் கேட்பதற்காகப் போட்டிருக்கும் போஸ்டர்களை யும் இந்தியிலேயே அச்சடிப்பது தானே?

"எனவே திராவிட முன்னேற் றக் கழகத்தைப் பற்றி இப்படிச் சாட்டப்படுகிற குற்றச்சாட்டு களைப் பொதுமக்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத் தவராகிய நாங்கள் எப்போதும் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டவர் கள். உண்மையை உண்மை யென்று சொல்லி நேர்மையான பாதை வழி நடப்பவர்கள்.

"காலஞ்சென்ற தமிழ்ப் பெரி யார் திரு. வி. க. அவர்கள் தமது கடைசி நாட்களில் தி. மு. கழகத்தினரை 'நாட்டின் கண் ணின் மணிகள்' என்று கூறி, அவர்களால்தான் இந்த நாட்டில் தமிழ் மொழி மீண்டும் உயிர் பெற்றெழ முடியும் என்றார்; அண்மையில் உண்ணாவிரத மிருந்து இறந்த தியாகி சங்கர லிங்கனார் அண்ணா அவர்களிடம், 'இவ்வளவு நாளும் உங்களைத் தவறாகப் புரிந்துகொண்டிருந் தேன்; ஆனால் இப்போதுதான் உங்களைப் பற்றிய உண்மை எனக்குத் தெரிகிறது' என்றார். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? திராவிட முன்னேற்றக் கழகம் எக்காலத்திலும் நேர்மையி லிருந்து வழுவினது கிடையாது என்பதுதான். இப்படி அரசியல் தியாகிகள், பெரியவர்கள், மாற் றுக் கட்சியைச் சேர்ந்த நல்லோர் அனைவரும் பாராட்டும் நிலையில் தி. மு. கழகம் இன்று விளங்கு கிறது. அந்த அளவு உண்மை யுடனும் நேர்மையுடனும் நடக் கும் திராவிட முன்னேற்றக் கழ கத்தை மக்கள் ஆதரிக்க வேண் டும்."

ஜீவாதார உரிமைகளைக் கிண்டல் செய்தோர் ஓட்டு கேட்க வருகிறார்கள்

மக்கள் விழிப்புடனிருக்கவேண்டும்

தோழியர் சத்தியவாணி - முத்து வேண்டுகோள்

முறையே தென் சென்னை பாராளுமன்றத் தொகுதியிலும் சென்னை—எழும்பூர் சட்டசபைத் தொகுதியிலும் போட்டியிடும் கழக அபேட்சகர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோரை ஆதரித்து கடந்த 17-ந் தேதியன்று சென்னை 28-வது வட்டத் தி. மு. கழக ஆதரவாளர் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் **தோழியர் சத்தியவாணி-முத்து** அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"இன்று தேர்தலில் போட்டியிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து நிற்பது மிகப் பெரிய கட்சியான காங்கிரசை! இந்த நாட்டு மக்களுக்கு வாழ்வு தருவதாகச் சொல்லி பதவி ஏறி, இப்போது அவர்களையெல்லாம் வாடவைத்திருக்கும் ஒரு கட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது. இந்த நேரத்தில், பொதுமக்கள் உறங்கிக் கொண்டிருக்கக் கூடாது. யார் ஆண்டால் என்ன என்ற கருத்திலோ, 9 ஆண்டுகள் ஆண்ட காங்கிரசே ஒன்றும் செய்யவில்லையே—இவர்கள் மட்டும் வந்தால் என்ன செய்துவிடப்போகிறார்கள் என்ற சலிப்பிலோ பொதுமக்கள் இருக்கக்கூடாது. இனிமேலும், நாம் வாழ வேண்டுமானால், நமது பிள்ளைகளைப் பற்றிய கவலை இருக்குமானால், நம்மை வாழ வைக்கும்அரசியல் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்—அந்த ஆட்சி எந்த முறையில் அமைந்திருக்க வேண்டும்—அந்த ஆட்சியின் தலைவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்பதை மக்கள் இந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்வளவு காலமாகக் காங்கிரஸ் நமக்குச் செய்ததென்ன—இனிமேல் திராவிட முன்னேற்றக் கழகம் நமக்குச் செய்யப்போவதென்ன என்பவைகளைப் பற்றி நன்றாக ஆராய்ந்து பார்த்து அதைப் பிறருக்கும் எடுத்துச் சொல்லவேண்டும்.

"இவ்வளவு நாளாக நம்முடைய சட்டசபை, சட்டசபை மாதிரி காணப்படவில்லை; வெறும் 'தூங்கும் மடமா'கக் காட்சி அளித்ததை நாம் பார்த்தோம். என்றைக்காவது ஒரு நாள் காங்கிரசார் சட்டசபையில் ஏழைகளைப் பற்றி, பாட்டாளிகள் பற்றி, விவசாயிகள், நெசவாளர்கள் குறை பற்றிக் குரல் எழுப்பினது உண்டா? ஆனால், சர்க்கார் மேற்கொண்ட எல்லா செயல்களையும் வெறும் கை காட்டி மரங்களாக—பொம்மைகளாகக் கையைத் தூக்கி ஆதரித்தனரே தவிர, மக்களைப் பற்றி கவலைப்பட்டதே கிடையாது. நமது உரிமைகளை—நமது ஜீவாதாரப் பிரச்சினைகளை அவர்கள் மறந்துவிட்டனர். நம்முடைய உரிமைக் குரல்களையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளாமல், அவைகளெல்லாம் பிரச்சினைகளா என்று கேலி பேசினர்—கிண்டல் செய்தனர்.

"நாம் தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கு வேண்டும்—என்று உரிமைக் குரல் கொடுத்தோம்; அதை அவர்கள் கேலி செய்தனர். முதன் மந்திரியாக வீற்றிருக்கும் காமராசர், 'குளமாவது மேடாவது' என்று கூறிக் கிண்டல் செய்தார். நமது மொழி தமிழ்—எனவே, நமது நாடு தமிழ் நாடு என்று பெயரிடப்படவேண்டும் என்றோம். 'அது முடியாது' என்றார்கள். இப்படி எதெதெல்லாம் நமது ஜீவாதாரப் பிரச்சினைகளாக இருந்தனவோ, அவற்றையெல்லாம் அவர்கள் கேலிக்குரியவைகளாகத் தான் கருதினார்களே தவிர முக்கியப் பிரச்சினைகளாகக் கருதவில்லை.

"இவர்களுக்குத் தேவையெல்லாம் டில்லி என்ன சொல்கிறது—அதை எப்படி நிறைவேற்றுவது—அதற்கு இந்த நாட்டு மக்களை எப்படி ஏமாற்றுவது என்பது மட்டுந்தான். இவைகளையெல்லாம் பொதுமக்கள் சிந்தித்து 'நாம் இனிமேல் சட்டசபைக்கு அனுப்புவோர் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்' என்பதை நன்றாக ஆராய்ந்து தெளிந்து முடிவு கட்டவேண்டும்.

"நாட்டில் எதிர்க்கட்சி வேண்டும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால், எது எதிர்க்கட்சி என்பதில்தான் எல்லோருக்கும் முரண்பாடு இருக்கிறது.

"எதிர்க்கட்சி என்பது, ஆளும் சர்க்கார் செய்கிற நல்லவைகளை வரவேற்க வேண்டும்; தீமைகளைத் தடுக்க வேண்டுமே தவிர, எதிர்க்கட்சி என்றாலே ஆளும் கட்சியினர் செய்யும் எதையும் எதிர்த்தாக வேண்டும் என்பதல்ல. அந்த முறையில் கடந்த 9 ஆண்டுகளாக இந்த நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகமும், சர்க்கார் மக்களுக்குச் செய்த நன்மைகளை வரவேற்கிறது; மக்களுக்குச் செய்த தீமைகளை, கொடுமைகளை, துரோகங்களைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்கிறது. ஆச்சாரியார் இங்கு முதல் மந்திரியாக இருந்த காலத்தில் அரிசிப் பங்கீட்டை ரத்து செய்தார்; நாமும் பாராட்டினோம். மதுவிலக்கைக் கொண்டு வந்தார்கள்—வரவேற்றோம். அதே நேரத்தில் சர்க்கார் செய்த அநீதிகளைத் துணிவுடன் தட்டிக்கேட்டோம். இப்படி எதிர்க்கட்சி என்பது சர்க்கார் செய்யும் நல்லவைகளை வரவேற்று, தீமைகளைத் தட்டிக் கேட்கும் துணிவும் பெற்றிருக்க வேண்டும்.

"திராவிட முன்னேற்றக்கழகம் இன்று எதையும் புதிதாகச் சொல்லவில்லை. ஏற்கனவே மக்களிடம் தனது கொள்கைகளை எடுத்துரைத்திருக்கிறது. அந்தக் கொள்கைகளை நிலைநாட்டிக் கொள்ள தேர்தலை ஒரு வாய்ப்பாகக் கருதுகிறது.

"அதை சிந்திக்காமல், 'காங்கிரஸ் எது சொன்னாலும் எங்கள் ஓட்டு காங்கிரசுக்கே' என்ற நிலை பொதுமக்களிடம் நிலவுமானால், நிச்சயம் நமது வாழ்க்கை அழிந்துவிடும். கண்ணை மூடிக்கொண்டு 'காங்கிரசுக்கே எங்கள் ஓட்டு' என்று சொல்லுவோரை, 'ஒரு ஐந்தாண்டு காலத்திற்கு எங்களுக்கும் 'சான்ஸ்' தாருங்கள்; அதன் பிறகு நாடு எப்படி இருக்கிறது — பாருங்கள்' என்று பொதுமக்களைக் கேட்கிறது தி. மு. கழகம்.

"இன்றிருக்கிற நிலைமைமாறி, நாட்டில் புதியதோர் மாறுதல் வரவேண்டுமென விரும்புவார்களேயானால், மக்கள், உதய சூரியனை ஆதரிக்கவேண்டியது அவசியமாகும்.

"மக்கள், சூரியனை நாடிச் செல்லவேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால், சூரியன் தனது கடமைகளை ஒழுங்காக—தவறாமல் தானாகவே செய்து கொண்டிருக்கும். அதுபோலவே தான் நமது கழகத் தோழர்களும் தாங்களாகவே தங்கள் கடமையுணர்ந்து பணியாற்றுவார்கள்; அவ்வப்போது தேவையான நேரங்களில் வந்து உதவுவார்கள். ஏனெனில் நமது கழகத் தோழர்கள் அனைவரும் பொதுமக்களின் அன்றாடப் பிரச்சினைகளில்—மக்களின் இன்பதுன்பங்களில் இரண்டறக் கலந்திருப்பவர்கள். ஆகவே, கழகத் தோழர்களை ஆதரித்து உதய சூரியன் பெட்டியில் வாக்குப்போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

புரட்சி நடிகர்

எம். ஜி. இராமச்சந்திரன்

சுற்றுப்பயண விவரம்

குறிப்பு: தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுடன்' தோழர் அ. பொன்னம்பலனார், நடிகர் என். எஸ். நாராயணன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

பிப். 20:
காலை 9 மணி: தஞ்சை (சிறப்புக் கூட்டம்); 11 மணி: கந்தர்வக் கோட்டை (பொதுக்கூட்டம்); பகல் 1 மணி: லால்குடி (பொதுக்கூட்டம்); மாலை 4 மணி: (சேலம்) வேலூர் (பொதுக்கூட்டம்; 6 மணி: கரூர் (சிறப்புக் கூட்டம்); இரவு 10 மணி: திண்டுக்கல் 'இன்பக் கனவு' நாடகம்.

பிப். 21:
காலை 9 மணி: சித்தையன் கோட்டை; 11 மணி: பட்டிவீரன்பட்டி; பிற்பகல் 4 மணி; உடுமலைப்பேட்டை தொகுதி.

பிப். 22, 23, 24:
நாகர்கோயில்—நாடகங்கள்.

பிப். 25:
காலை 10 மணி: ஸ்ரீவில்லிபுத்தூர் (சிறப்புக் கூட்டம்); பிற்பகல் 4 மணி: திருக்கோட்டியூர் தொகுதி.

பிப். 26:
காலை 10 மணி: கம்பம் (சிறப்புக்கூட்டம்); பகல் 12 மணி: உத்தமபாளையம் தொகுதி; பிற்பகல் 4 மணி: தேனி தொகுதி.

பிப். 27:
இரவு 9 மணி: மதுரை—'சுமைதாங்கி' நாடகம்.

மார்ச் 1:
ஸ்ரீபெரும்புதூர் தொகுதி.

மார்ச் 2:
காலை 8 மணி: லால்பேட்டை; 9-30 மணி: சிதம்பரம் (சிறப்புக் கூட்டம்); 10-30 மணி: திருமுஷ்ணம்; பிற்பகல் 2 மணி: நெல்லிக்குப்பம்; 4 மணி: கடலூர்; 6 மணி: விருத்தாசலம்; 8 மணி: கள்ளக்குறிச்சி; 10 மணி: தர்மபுரி.

மார்ச் 3:
சேலம் தொகுதி.

மார்ச் 4:
காலை 10 மணி: அரூர்; 12 மணி: சிங்காரப்பேட்டை; பிற்பகல் 3 மணி: திருப்பத்தூர் (வ. ஆ.); 5 மணி: கந்திரி; 6-30 மணி: ஜொலார்பேட்டை; 8-30 மணி: வாணியம்பாடி.

மார்ச் 5, 6:
சென்னை நகரத் தொகுதிகள்.

மார்ச் 8:
குளித்தலைத் தொகுதி.

மார்ச் 9:
மதுரை மத்திய தொகுதி.

க. அன்பழகன்

அறிவிப்பு

★

"சென்னை எழும்பூர் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகராகச் சென்னை சட்டசபைக்குப் போட்டியிடுகின்ற என்னைப்பற்றி, எனக்கு அறிவிக்காமலும் என் அனுமதியின்றியும் வெளியிடப்படும் அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் விளம்பரங்கள் முதலிய எவையும் என்னைக் கட்டுப்படுத்த மாட்டா என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அன்பன்,
க. அன்பழகன்

கோவை நகரத் தொகுதியில்

தேர்தல் கூட்டங்கள்

★

என். வி. நடராசன்:

20—2—57 இரவு 10 மணிக்கு தெப்பக்குளம் வீதி மைதானத்திலும், 21-2-57 மாலை 5 மணிக்கு 18-வது வார்டு கோட்டை மைதானத்திலும், இரவு 7 மணிக்கு 20-வது வார்டு மாகாளியம்மன் கோயில் மைதானத்திலும் நடைபெறும் கூட்டங்களில் துணைப் பொதுச்செயலாளர் **என். வி. நடராசன்** கலந்துகொள்வார்.

சிற்றுளி-சுப்பிரமணியம்:

21—2—57 மாலை 5 மணிக்கு 13-வது வார்டு தடாகம் ரோடு நகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு அருகிலும், இரவு 7 மணிக்கு 21-வது வார்டு வெட்டர்பர்ன் பேட்டை வீதியிலும் நடைபெறும் கூட்டங்களில் தோழர் **சிற்றுளி-சுப்பிரமணியம்** கலந்துகொள்வார்.

காஞ்சி-கல்யாணசுந்தரம்:

24—2—57 மாலை 5 மணிக்கு 3-வது வார்டு சாந்தி ஆஸ்ரம சர்ச்சின் எதிர்ப்புற மைதானத்திலும், மாலை 7 மணிக்கு 11-வது வார்டு வெங்கிடசாமி பிள்ளை ஆரம்பப் பள்ளி எதிர்ப்புற மைதானத்திலும், இரவு 8 மணிக்கு 23-வது வட்டாரம் காந்தியார் பூங்கா மைதானத்திலும் நடைபெறும் கூட்டங்களில் தோழர் **காஞ்சி-கல்யாணசுந்தரம்** கலந்துகொள்வார்.

சி. வி. எம். அண்ணாமலை

தொகுதியில் தேர்தல் கூட்டங்கள்

பிப். 20: மாலை 6 மணி: சர்க்கை வேலூர் (தி. நா. சம்பந்தம், செந்தாமரை).
பிப். 21: மாலை 6 மணி: மாத்தூர் (முகவை - ஆர். எஸ். பாண்டியன்).
பிப். 22: மாலை 6 மணி: குத்தம்பாக்கம் (அ. பொன்னம்பலனார், முகவை-ஆர். எஸ். பாண்டியன், தி. ந. சம்பந்தம்).
பிப். 24: மாலை 6 மணி: எடையார்பாக்கம் (அண்ணா).
பிப். 26: மாலை 4 மணி: விளாஞம்பாக்கம்; மாலை 6 மணி: ஸ்ரீபெரும்புதூர்; இரவு 8 மணி: மதுரமங்கலம் (கே. ஆர். இராமசாமி, முகவை-ஆர். எஸ். பாண்டியன்).
மார்ச் 1: காலை 9 மணி: ஆவடி; 10 மணி: தின்னனூர்; 11 மணி: திருமழிசை; பகல் 12 மணி: குன்றத்தூர்; 1 மணி: சுங்குவார் சத்திரம்; 3 மணி: மதுரமங்கலம்; மாலை 4 மணி: எடையார்பாக்கம்; 6 மணி: ஸ்ரீபெரும்புதூர்; (எம். ஜி. இராமச்சந்திரன்).

சென்னை 42-வது வட்ட தி. மு. கழகப் பொதுஉறுப்பினர் கூட்டம்

20-2-57 இரவு 9 மணிக்கு சென்னை 42-வது வட்டக் கிளைக் கழகப் பணிமனையில் (எண் 4, நமசிவாயமுதலி தெரு,) கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கலா நிகழ்ச்சி

19-2-57 மாலை 6 மணிக்கு புது ஆயக்குடி ஆசாரத் திடலில் தோழர் கரிகாலன்—தோழியர் இராணி குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

சிற்றுளி - சுப்பிரமணியம்

சுற்றுப்பயணம்

பிப். 20: திருகோஷ்டியூர்; பிப். 21: சிவகெங்கை; பிப். 22, 23: கோவை; பிப். 24: சூலூர்; பிப். 25: சங்கிரி; பிப். 27: மேச்சேரி; பிப். 28, மார்ச். 1: **ஆத்தூர்.**

தேர்தல் கூட்டங்கள்

★

சென்னை பேசின்பிரிட்ஜ்:

20—2—57 மாலை 6-மணிக்கு சென்னை பேசின்பிரிட்ஜ் தொகுதி அபேட்சகர் தோழர் **என். வி. நடராசன்** அவர்களை ஆதரித்து, சென்னை 16-வது வட்டத் தி. மு. கழகத் தேர்தல் குழுவின் சார்பில் யானைகவுனிக்கு அருகில் காடாத்திபிள்ளை தெருவில் தோழர் **என். இ. நாராயணன்** தலைமையில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், **முகவை ஆர். எஸ். பாண்டியன், வி. ஆர். நாராயணசாமி, சி. பஞ்சாட்சரம்** ஆகியோர் பேசுவர்.

* * *

21—2—57 மாலை 6-மணிக்கு சென்னை ஒற்றவாடை தியேட்டருக்கு அருகிலுள்ள அம்மன்கோவில் தெருவில் தோழர் **என். வி. நடராசன்** அவர்களை ஆதரித்து சென்னை 27-வதுவட்டத் தி. மு. கழகச் சார்பில் தோழர் **ஜே. எஸ். ஸ்ரீராமுலு** தலைமையில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசுவர்.

* * *

21—2—57 மாலை, சென்னை—பெத்துநாய்க்கன்பேட்டை கன்னையா நாயுடு தெருவில் தோழர் **என். வி. நடராசன்** அவர்களை ஆதரித்து சென்னை 7-வதுவட்டத் தி. மு. கழகச் சார்பில் தோழர் **லா. கணேசன்** தலைமையில் தேர்தல் கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், டி. சந்திரசேகரன், பெ. த. இன்மொழியன், சி. ஆர். பாலசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

மேலூர் தொகுதி:

19—2—57 மாலை 6-மணிக்கு உரன்காரன்பட்டியில் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் **பி. சமதர்மம், ஏ. வேல்சாமி, இரா. மீ. மாசிலாமணி, சி. வல்லாளன்** ஆகியோர் பேசுவர்.

போளூர் தொகுதி:

போளூர் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் **ச. மொ. அண்ணாமலை** அவர்களை ஆதரித்து, 23—2—57 மாலை 6-மணிக்கு போளூர் பஸ் நிலைய அருகிலும், இரவு 8-மணிக்கு படவேடு கிராமத்திலும் தோழர் **கண்ணன்** தலைமையில் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறும். தோழர் **ப. உ. சண்முகம்** மற்றும் பலர் பேசுவர்.

தாளா தொகுதி தி. மு. கழக உறுப்பினர்கட்கு:

24—2—57 காலை 6 மணிக்கு, கோவை மாவட்ட தாராபுரம் கூற்றம் தி. மு. கழகத் தேர்தல் அலுவலகத்திலிருந்து தேர்தல் பிரச்சார சைக்கிள் ஊர்வலம் ஒன்று புறப்படும். கழகத் தோழர்கள் ஆதரவாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன எம். ஏ.